1978 மார்ச் 13]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, வசதியுள்ள பேரூராட்சிகள்-சினிமாத் தியேட்டர் இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்-தியேட்டர் கட்ட அனுமதி கேட்டால், அனுமதி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பது தெரியவில்லை. வசதியுள்ள பேரூராட்சிகள் இப்படி ஒரு கோரிக்கையை எழுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்திலிருந்து நடத்தப்படும் கலையரங்கு சீசன் காலத்தில் தான் பயன்படுகிறது. மற்ற நாட்களில் நகரியத்திற்கு வருமானம் கிடைக்கின்ற வகையில் வேறு எதற்காவது பயன் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்தில் அமைந்திருப்பது திரையரங்கு அல்ல ; அது ஒரு டவுன் ஹால். நாடகங்கள் போடவும், சில சமயங்களில் திரைப்படங்கள் காண்பிக்கவும் அது பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது, திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் கேள்வி நேரத்தின்போது ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். பின்னால் இருக்கிற கண்ணாடிக்கதவு மூடப்படும்போது வந்த ஒளிதான் அவர்கள் குறிப்பிட்டது. அவர்கள் மன்ற நடவடிக்கையை மட்டும்தான் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், அங்கே, மேலே என்ன நடக்கிறது என்றும் உன்னிப்பாக கவனித்து சொன்னதற்கு நன்றி.

இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் மருந்துகள் வழங்கல்.

* 541 வினா— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் சாதாரணமாக வழங்கி வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட மருந்து வகைகள் ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம் ? அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தமாதிரி ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் விலை அதிகமுள்ள விசேஷ மருந்துகள்கிடைக்கவில்லை என்று பிரச்னை மறுபடியும் மறுபடியும் வந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு ஒரு தடவை அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, அடிக்கடி மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொல்லப் படுகின்ற இடங்களுக்கு உத்தரவு போட்டு, 'சப்ஸ்டிடியூட்' மருந்து கூட அல்ல, 'ஒரிஜினல்' மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னுர்கள். அதற்குப் பிறகும் தொடர்ந்து இந்த புகார் வந்திருப்பதை தடுத்து, ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் இருக்கும் நோயாளிகளுக்கு நிலைமைக்கேற்ப அந்த நல்ல மருந்துகளைக் கொடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது? அதைக் கண்காணிக்கும் முறை யில் அடிக்கடி கண்காணிப்பு நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ள மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்களுக்கு கேள்வியைச் சுருக்கமாகப் போட முடியும். எல்லாக் கேள்வி களுக்குமே நீண்டநேரம் எடுத்துக்கொள்கிறீர்கள். கேள்வியைச் சுருக்கமாகப் போட உங்களுக்குத் தெரியும்; சுருக்கமாகப் போடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபற்றிய புகார் எந்தெந்த இடத்தில் எப்படி நடக்கிறது என்று சொன்னுல் நான் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்கி றேன். கண்காணிப்பு என்ற முறையில் நானே அநேகமாக எல்லா மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் சென்று, 'சர்பிரைஸ் செக்' செய்து கொண்டிருக்கிறேன் என்பதை அவர்கள் அறிவார்கள்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, எந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்குச் சென்றுலும், 'சப்ஸ்டிடியூட்' மருந்துதான் கொடுக்கிறுர்கள்; டாக்டர்கள் 'பிரிஸ்கிரைப்' செய்யும் மருந்து இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அப்படி ஒரு புகார் இருந்தது உண்மைதான். புகார் எந்த இடத்திலிருந்து வந்ததோ உடனடியாக அங்கு சென்று, உரிய நடவடிக்கை எடுத்து அந்த குறை தீர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, ஐயனவரத்தில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் தவறுன ஊசி மருந்து கொடுக்கப் பட்டு, அதன் காரணமாக பலர் இறந்து விட்டதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா ? அது அமைச்சரவர்களின் கவ னத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். மூலக் கேள்வி ஆர்டினரி பிரிவு மருந்துகளை ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளதா என்பது பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளுக்கு தானே நேரில் சென்று பலமுறை பார்த்ததாகச் சொன்னார்கள். அவர் கள் அமைச்சராகச் சென்றார்களா அல்லது மாறு வேடத்தில் சென்றார்களா ? மாறுவேடத்தில் சென்றால் பல தவறுகள் தெரிய வரும் ; அமைச்சராகச் சென்றால் ஒன்றும் தெரியாது.

(பதில் இல்லை.)

தொழிலாளர் நல நிதி

* 542 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழிலாளர் நல நிதிக்கு 1974-ம் ஆண்டு முதல், வருடத்திற்கு ஒவ்வொரு தொழிலாளர்களிடமும் ஒரு ரூபாய் பிடிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அந்நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

(இ) என்ன நல்ப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1973 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர்களிடமிருந்து ரூபாய் ஒன்றும், தொழிலதிபர்களிடமிருந்து ரூபாய் இரண்டும் தொழிலாளர் நல நிதியின் ஆண்டு சந்தாவாக வசூலிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—77 நாளன்று அந்நிதியில் இருந்த தொகை எழுபத்து ஏழு லட்சம் எழுபதாயிரத்து நானூற்று எண்பத் தொன்று ரூபாய்.

(இ) பத்து இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நடத் தப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் தொழிலாளருக்கென நான்கு படிப்பகங்கள் திறக்கப் பட்டுள்ளன. சென்னை திரு. வி. க. நகரில் தொழிலாளர்களின் குடும்பப் பெண்களால் பதிவு செய்யப்பட்டு நடத்தப்படும் மகளிர் மன்றத்திற்கு மானியம் அளிக்கப்படுகிறது. தொழிலாளர்